# NEWS LETTER

SEPTEMBER 2023 | செய்தி மடல் | VOLUME - 3




## தமிழ்த்துறை பற்றி…

எஸ்.ஆர்.எம். தமிழ்த்துறையானது 2003ஆம் ஆண்டில் இளங்கலை மாணவர்களுக்குத் தமிழை ஒரு பாடமாகக் கற்பிப்பதற்குத் தொடங்கப்பட்டது. இன்று 18 துறைகளில் தமிழ் ஒரு பாடமாகப் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்த்துறை ஆராய்ச்சித் துறையாகவும் 2006 முதல் இயங்கிவருகின்றது. இதுவரை தமிழ்த்துறையின் கீழ் 11 ஆய்வாளர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். தற்போது 10க்கும் மேற்பட்டோர் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் தங்கள் ஆய்வுசார்ந்தும் படைப்பு சார்ந்தும் இதுவரை 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். இவற்றிற்காகக் குடியரசுத் தலைவர் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளனர். தகுதி வாய்ந்த இதழ்களில் கட்டுரைகள் வெளியிட்டு வருவதோடு பல்வேறு கருத்தரங்குகளில் கலந்துகொண்டு தங்கள் ஆய்வை முன்வைத்தும் வருகின்றனர்.

மாணவர்களின் திறன்களை வளர்த்தெடுக்கும் விதமாக, ஆண்டுதோறும் பல்வேறு கருத்தரங்குகளை நடத்திவருவதோடு கவிமாலை, பேச்சரங்கம், ஆய்வரங்கம் ஆகியவற்றையும் தமிழ்த்துறை சிறப்பாக ஒருங்கிணைத்து வருகின்றது.


## DEPARTMENT OF TAMIL

## FACULTY OF SCIENCE AND HUMANITIES

## SRM INSTITUTE OF SCIENCE AND TECHNOLOGY

## KATTANKULATHUR - 603203

# துறைப் பேராசிரியர்கள்

## 2022 – 2023 செயல்பாடுகள்



**முனைவர் பா. ஜெய்கணேஷ்**

இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்,

ஆய்வுக்கட்டுரைகள் – 04 , நிறுவனங்களில் சிறப்பு வல்லுநர் - 09, விருது - 01, ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி -05, இதழ்களில் ஆசிரியர் குழு – 04, கல்விசார் அமைப்புகளில் உறுப்பினர் – 03.



**முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி**

உதவிப் பேராசிரியர்

ஆய்வுக்கட்டுரைகள் - 3, சிறப்பு வல்லுநர் - 1, விருதுகள் - 3, கல்விசார் அமைப்புகளில் உறுப்பினர் – 02.



**முனைவர் சு. சரஸ்வதி**

உதவிப் பேராசிரியர்

ஆய்வுக்கட்டுரைகள் – 3, சிறப்பு வல்லுநர் – 2, விருது - 1, கல்விசார் அமைப்புகளில் உறுப்பினர் – 02.



**முனைவர் தா. ஜெயந்தி**

உதவிப் பேராசிரியர்

ஆய்வுக்கட்டுரைகள் – 2, சிறப்பு வல்லுநர் - 2, ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி - 5 கல்விசார் அமைப்புகளில் உறுப்பினர் – 02.



**முனைவர் ந. இரஞ்சன்**

உதவிப் பேராசிரியர்

ஆய்வுக்கட்டுரைகள் – 4, சிறப்பு வல்லுநர் - 2, விருது - 1, கல்விசார் அமைப்புகளில் உறுப்பினர் – 02, ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி – 3.


# தேசியக் கருத்தரங்கம்

தமிழ்த்துறையானது ஒவ்வோர் ஆண்டும் வெவ்வேறு பொருண்மையில் கருத்தரங்கத்தினை நடத்தி வருகின்றது. அந்த வகையில் 15.03.2023 புதன் கிழமையன்று **காலந்தோறும் தமிழ்க் கவிதை மரபுகள்** என்னும் தலைப்பில் முனைவர் தி.பொ. கணேசன் சிற்றரங்கம்-1இல் ஒருநாள் **தேசியக் கருத்தரங்கம்** சிறப்பாக நடைபெற்றது.




இக்கருத்தரங்கத்தின் சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளரும் தமிழ்ப்பேராய விருதாளரும் சிறந்த கவிஞருமான **பேராசிரியர் சா.பாலுசாமி** அவர்கள் **தமிழ்க் கவிதை மரபு** என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இவரைத் தொடர்ந்து குடியரசுத்தலைவர் விருதாளரும் சென்னைப் பல்கலைக் கழக மொழித்துறைத் தலைவருமான **பேராசிரியர் ய.மணிகண்டன்** அவர்கள் **உலகத் தமிழ்க் கவிதை வரலாறு** என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.

இக்கருத்தரங்கின் இரண்டாம் அமர்வில் கட்டுரையாளர்கள் தங்கள் கட்டுரைகளை விளக்கி உரைத்தனர். இக்கருத்தரங்கத்தினை அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் தலைவர் **முனைவர் ஆ. துரைசாமி** அவர்கள் தலைமையுரை ஆற்ற இணைப்புலத்தலைவர் **முனைவர் சா.ஆல்பர்ட் அந்தோணிராஜ்** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர் பா. ஜெய்கணேஷ்** அவர்கள் வரவேற்புரையாற்ற, தமிழ்த்துறையின் உதவிப் பேராசிரியர் **முனைவர் தா.இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி** அவர்கள் நன்றியுரையாற்றினார்.



# ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி -1




காட்டாங்குளத்தூரில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் அறிவியல் மற்றும் கலையியல் புலத் தமிழ்த்துறை ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு தலைப்பில் சிறந்த முறையில் ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை நடத்தி வருகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டும் 20.07.2022 முதல் 26.07.2022வரை ஏழு நாட்கள் இணைய வழியில் *தமிழ்ப் பதிப்பு வரலாறும் பதிப்பாளுமைகளும்* என்னும் தலைப்பில் ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்பெற்றது.

இதன் தொடக்க விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. ஜெய்கணேஷ் அவர்கள் வரவேற்புரை யாற்ற, புலத்தலைவர் முனைவர் ஆ. துரைசாமி அவர்கள் தொடக்க உரை வழங்க, தமிழ்ப்பேராயத்தின் தலைவர் முனைவர் கலைமாமணி கரு. நாகராசன் ஐயா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். 19ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் பதிப்புச் சூழல் என்னும் தலைப்பில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் இரா. சீனிவாசன் அவர்கள் சிறப்புரை வழங்கினார்.




இரண்டாம் நாள் ஆறுமுக நாவலர் பதிப்புகள் என்னும் தலைப்பில் ஆய்வறிஞர் முனைவர் ஜெ. அரங்கராஜ் அவர்களும் அகநானூற்றுப் பதிப்பியல் என்னும் தலைப்பில் முனைவர் மா. பரமசிவன் அவர்களும் உரை வழங்கினர்.

மூன்றாம் நாள் வ.உ.சி. பதிப்புப் பணிகள் என்னும் தலைப்பில் முனைவர் இரா. வெங்கடேசன் அவர்களும் சி.வை.தா. பதிப்புகள் என்னும் தலைப்பில் முனைவர் ப. தாமரைக் கண்ணன் அவர்களும் சிறப்புரை வழங்கினர்.

நான்காம் நாள் உ.வே.சா. பதிப்புகள் என்னும் தலைப்பில் முனைவர் கோ. உத்திராடம் அவர்களும் மூலபாட ஆய்வியலும் தமிழ்ப் பதிப்புலகமும் என்னும் தலைப்பில் முனைவர் மு.வெ. பிரகாஷ் அவர்களும் சிறப்புரை வழங்கினர்.

ஐந்தாம் நாள் எஸ்.வையாபுரிப் பிள்ளை பதிப்புகள் என்னும் தலைப்பில் முனைவர் பெருமாள்முருகன் அவர்களும் 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கணப் பதிப்புகள் என்னும் தலைப்பில் முனைவர் அ. சதீஷ் அவர்களும் உரை வழங்கினர்.

ஆறாம் நாள் 20ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் பதிப்புச் சூழல் என்னும் தலைப்பில் பொ. வேல்சாமி அவர்களும் தேவாரப் பதிப்புகள் என்னும் தலைப்பில் முனைவர் அ.மோகனா அவர்களும் உரை வழங்கினர்.

ஏழாம் நாளான நிறைவுவிழா அன்று தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. ஜெய்கணேஷ் அவர்கள் வரவேற்புரையாற்ற இணைப் புலத் தலைவர் முனைவர் சா. ஆல்பர்ட் அந்தோணி ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். குடியரசுத் தலைவர் விருதாளரும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித் துறைத் தலைவருமான பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்கள் நவீன இலக்கியப் பதிப்புகள் என்னும் அரிய தலைப்பில் சிறந்த உரை வழங்கினார்.

ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் பல்வேறு கல்லூரிகளின் பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பாடத்திட்டக் குழு உறுப்பினர்

**முனைவர் பா. ஜெய்கணேஷ்**

- தமிழ்த்துறை, விவேகானந்தா பெண்கள் கலை அறிவியல் கல்லூரி, திருச்செங்கோடு.
- தமிழ்த்துறை, புனித பீட்டர் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

# ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி - 2




காட்டாங்குளத்தூரில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் அறிவியல் மற்றும் கலையியல் புலத் தமிழ்த்துறை ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு தலைப்பில் சிறந்த முறையில் ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை நடத்தி வருகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டும் 04.05.2023 முதல் 11.05.2023 வரை ஏழு நாட்கள் இணைய வழியில் தமிழ் யாப்பியல் என்னும் தலைப்பில் நடத்தப்பெற்றது.

இதன் தொடக்க விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா.ஜெய்கணேஷ் அவர்கள் வரவேற்புரையாற்ற புலத்தலைவர் முனைவர் ஆ. துரைசாமி அவர்கள் தொடக்கவுரை வழங்கினார். குடியரசுத் தலைவர் விருதாளரும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்மொழித் துறைத் தலைவருமான பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்கள் தமிழ் யாப்பியல் என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.

இரண்டாம் நாள் எட்டுத்தொகை – புறநானூற்று யாப்பியல் என்னும் தலைப்பில் முனைவர் அ. சதீஷ் அவர்களும் பத்துப்பாட்டு யாப்பியல் என்னும் தலைப்பில் முனைவர் அ.கஸ்தூரி அவர்களும் உரை வழங்கினர்.

மூன்றாம் நாள் தமிழ் யாப்பு வடிவ வளர்ச்சி: வெண்பா யாப்பு என்னும் தலைப்பில் முனைவர் நா. மோகன்குமார் அவர்களும் பதினெண் கீழ்க்கணக்கு யாப்பியல் என்னும் தலைப்பில் முதுமுனைவர் ப. திருஞானசம்பந்தம் அவர்களும் சிறப்புரை வழங்கினர்.

நான்காம் நாள் சீவகசிந்தாமணி யாப்பியல் என்னும் தலைப்பில் முனைவர் ச. பாரதி அவர்களும் தேவார யாப்பியல் என்னும் தலைப்பில் முனைவர் அ. மோகனா அவர்களும் சிறப்புரை வழங்கினர்.

ஐந்தாம் நாள் பிரபந்த யாப்பியல் என்னும் தலைப்பில் முனைவர் ஜெ.இராதாகிருஷ்ணன் அவர்களும் கந்தபுராண யாப்பியல் என்னும் தலைப்பில் முனைவர் க. சசி அவர்களும் உரை வழங்கினர்.

ஆறாம் நாள் தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள்: உரையாசிரியர் நோக்கு என்னும் தலைப்பில் கு. முதற் பாவலர் அவர்களும் தமிழ் யாப்பியல் இயைபுத்தொடை என்னும் தலைப்பில் முனைவர் இரா.வெங்கடேசன் அவர் களும் உரை வழங்கினர்.

ஏழாம் நாளான நிறைவுவிழா அன்று தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. ஜெய்கணேஷ் அவர்கள் வரவேற்புரையாற்ற, இணைப்புலத் தலைவர் முனைவர் சா. ஆல்பர்ட் அந்தோணி ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கனடாவிலிருந்து கவிஞர் சேரன் உருத்திரமூர்த்தி அவர்கள் கவிதை களில் யாப்பும் நவீனமும் என்னும் அரிய தலைப்பில் சிறந்த உரை வழங்கினார்.

மேலை நாடுகளிலிருந்து சிறப்பு விருந்தினர்களாக தகைசால் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன், பாவலர் மதுரன் தமிழவேள் ஆகியோர் கலந்து கொண்டு இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் பல்வேறு கல்லூரிகளின் பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# கணித்தமிழ்ப் பேரவை

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின்கீழ் இயங்கும் அறிவியல் மற்றும் கலையியல் புலத் தமிழ்த்துறையும் கணினிப் பயன் பாட்டியல் துறையும் சென்னையிலுள்ள தமிழ் இணையக் கல்விக் கழகத்தோடு இணைந்து ஒருங்கிணைத்த கணித்தமிழ்ப் பேரவை தொடக்கவிழா திங்கட்கிழமை (06.02.2023) அன்று காலை 9.30 மணி அளவில் காட்டாங்குளத்தூர் எஸ்.ஆர்.எம். மருத்துவக் கல்லூரிக் கலையரங்கத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. ஜெய்கணேஷ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் இணைப் புலத்தலைவர் முனைவர் சா. ஆல்பர்ட் அந்தோணி ராஜ் அவர்கள் தலைமையுரை வழங்கினார். இதில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணை இயக்குநர் ரெ. கோமகன் சார்பாகத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.ஜேம்ஸ் அவர்கள் முன்னிலை உரை வழங்கி மாணவர்களுக்குக் கணித்தமிழ் வளர்ச்சி குறித்து ஊக்கமளித்து உரையாற்றினார்.

தமிழ் இணையக் கல்விக்கழகக் கணித்தமிழ்ப் பேரவையின் ஆய்வு வளமையர் திரு. மு. அருண்குமார் அவர்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் செயல் பாடுகளை விளக்கினார். அவரைத் தொடர்ந்து எஸ்.ஆர்.எம். வள்ளியம்மை பொறியியல் கல்லூரியின் கணினி அறிவியல் பொறியியல் துறை உதவிப் பேராசிரியரும் தமிழ்மன்ற ஒருங்கிணைப் பாளருமான பேராசிரியர் க. சண்முகம் அவர்கள் கணித்தமிழ் அடிப்படைகளும் பயன்பாடும் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றி





மாணவர்கள் மத்தியில் கணித்தமிழின் பயன்பாடுகள் குறித்து விளக்கமான உரை வழங்கி, இறுதியில் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் பிற துறைப் பேராசிரியர்களும் உட்பட 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தா. ஜெயந்தி அவர்கள் நன்றியுரை வழங்க, கணித் தமிழ்ப் பேரவை தொடக்கவிழா இனிதே நிறைவுற்றது.









# உலகத் தாய்மொழி நாள்




தாய்மொழிப் பற்றினை முதன்மைப்படுத்தி மாணவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தில் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்பட்டது. கிராம வாழ்வியல் சிறந்ததா? நகர வாழ்வியல் சிறந்ததா? எனும் தலைப்பில் விவாத அரங்கம் ஒன்றைத் தமிழ்த்துறை ஒருங்கிணைத்தது. இந்நிகழ்வில் பல்துறை மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

## உலகக் கவிதை நாள்




எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் அறிவியல் மற்றும் கலையியல் புலத் தமிழ்த்துறை ஒவ்வோர் ஆண்டும் உலகக் கவிதை நாளினைக் கொண்டாடி வருகின்றது. அந்த வகையில் இந்த ஆண்டும் 21.03.2023 அன்று உலகக் கவிதை நாள் விழா ஆங்கிலத் துறையுடன் இணைந்து சுப்புலட்சுமி கருத்தரங்க அறையில் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இக்கருத்தரங்கத்தின் சிறப்பு விருந்தினர்களாக இருபெரும் ஆளுமைகள் கலந்துகொண்டு கருத்தரங்கத்தினைச் சிறப்பித்தனர். அவர்களுள் எழுத்தாளரும் சிறந்த கவிஞருமான பேராசிரியர் யாழினி முனுசாமி அவர்கள் தமிழ்க் கவிதை என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இவ்வுரையில் சங்ககாலந் தொட்டுத்

தற்காலம் வரையிலான வரலாற்று நிகழ்வுகளை அழகிய புனைவுகளோடு எடுத்துரைத்தார்.

இவரைத் தொடர்ந்து ஆங்கிலத்துறையைச் சார்ந்த எழுத்தாளரும் சிறந்த கவிஞருமான பேராசிரியர் கேத்ரின் அவர்கள் உலகத் தமிழ்க் கவிதை வரலாறு என்னும் தலைப்பில் சிறந்த உரை வழங்கினார். இவ்வுரையில் பல வரலாற்று அறிஞர்களின் கூற்றினைச் சுட்டிக்காட்டித் தமிழ்க் கவிதையின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

இக்கருத்தரங்கத்தில் அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் தலைவர் முனைவர் ஆ. துரைசாமி அவர்கள் தலைமையுரை ஆற்ற, இணைப் புலத்தலைவர் முனைவர் சா. ஆல்பர்ட் அந்தோணி ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. ஜெய்கணேஷ் அவர்கள் வரவேற்புரையாற்ற, ஆங்கிலத்துறையின் தலைவர் முனைவர் சாந்தி சித்ரா அவர்கள் நன்றியுரையாற்றினார். இந்த அரிய கருத்தரங்கில் பலதுறைப் பேராசிரியப் பெருமக்களும் மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.










# உலக நாடக நாள்

காட்டாங்குளத்தூரில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் தமிழ்த்துறையும் ஆங்கிலத்துறையும் இணைந்து உலக நாடக தினத்தைக் கொண்டாடியது. அந்த வகையில் தமிழ்த்துறையின் பொம்மலாட்ட நாடக அரங்கு, ஆங்கிலத்துறையின் தெஸ்பியன் தியேட்டர் இணைந்து 27.03.2023 அன்று உலக நாடக தினம் என்னும் நிகழ்வை எம். எஸ். சுப்புலட்சுமி கருத்தரங்க அறையில் சிறப்பாக நடத்தியது.




இதில் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக மேனாள் மாணவர் மாயக்குரல் மன்னர் கிருஷ்ணா ஆனந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இதில் தனது தனித்திறமையின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் தலைவர் முனைவர் ஆ.துரைசாமி அவர்கள் தலைமையுரை ஆற்ற இணைப்புலத்தலைவர் முனைவர் சா.ஆல்பர்ட் அந்தோணி ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அறிவியல் மற்றும்

கலையியல் புலத்தின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. ஜெய்கணேஷ் அவர்கள் வரவேற்புரையாற்ற முனைவர் ந.இரஞ்சன் அவர்கள் நன்றியுரையாற்றினார். இந்த அரிய நிகழ்வில் பலதுறைப் பேராசிரியப் பெருமக்களும் மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.








## கவிமாலை




மாணவர்களுக்குக் கவிதை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் விதமாக வாரந்தோறும் கவிதை வாசிப்பு நிகழ்வைத் தமிழ்த்துறை ஏற்படுத்தியது. கவிதை வாசிப்புடன் நின்றிடாமல் கவிதைப் போட்டிகளை நடத்தி மாணவர்களுக்குக் கவிதை எழுதும் திறனை இதன்வழி வளர்த்தெடுத்தது.

# பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம்

## முதற்படி









மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் பொருட்டுப் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் இயங்கி வருகிறது. கவிதை, சிறுகதை, பாடல், நாடகம் போன்ற துறைகளில் மாணவர்கள் தங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் தமிழ்த்துறையின் கவிமாலை, இதழியல் துறை ஆகியவற்றோடு இணைந்து மாணவர்களுக் குப் பல்வேறு போட்டிகளை நடத்திப் பரிசளித்தது. கடந்த ஆண்டு பரிசளிப்புடன் மாணவர்களின் படைப்புகள் இடம்பெற்ற **வான்குருவி** இதழும் வெளியிடப்பட்டது.

# ஆரண்யா

தமிழ்த்துறை, வணிகவியல் (நிறுமச் செயலாண்மை), கணக்கியல் நிதித்துறை ஆகியவற்றுடன் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றமும் இணைந்து சுற்றுப்புறச் சூழலியல் குறித்த விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கை நிகழ்த்தியது. இந்நிகழ்வில் சூழலியலை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் பல்வேறு போட்டிகளை நடத்தியது. அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மரக்கன்றுகளும் கேடயங்களும் பரிசாக வழங்கப்பட்டன.












# ஆய்வுப்பணி

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் கடந்த ஆண்டு யூ.ஜி.சி. ஆய்வு இதழ்களில் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகளின் விவரம்.

| வ.எ. | பேராளர் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | முனைவர் பா. ஜெய்கணேஷ் | 04 |
| 02 | முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி | 03 |
| 03 | முனைவர் சு. சரஸ்வதி | 03 |
| 04 | முனைவர் தா. ஜெயந்தி | 02 |
| 05 | முனைவர் ந. இரஞ்சன் | 04 |

## பன்னாட்டு / தேசியக் கருத்தரங்கம் பங்கேற்பு


| வ.எ. | பேராளர் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | முனைவர் பா. ஜெய்கணேஷ் | 05 |
| 02 | முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி | 03 |
| 03 | முனைவர் சு. சரஸ்வதி | 04 |
| 04 | முனைவர் தா. ஜெயந்தி | 05 |
| 05 | முனைவர் ந. இரஞ்சன் | 02 |

## 11ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கட்டுரைகள்

உலக அளவிலான தமிழ் அறிஞர்கள் பங்குபெற்ற 11ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களான முனைவர் பா. ஜெய்கணேஷ், முனைவர் ந. இரஞ்சன் ஆகியோரின் ஆய்வுக்கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## எஸ்.ஆர்.எம். ஆராய்ச்சி நாள்

எஸ்.ஆர்.எம். ஆராய்ச்சி நாளை முன்னிட்டு 23.02.2023 அன்று முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். இதில் செல்வி த. மகேஸ்வரி அவர்கள் கட்டுரை தேர்ந்தெடுக்கப்பட்டு 28/02/2023 அன்று நடைபெற்ற ஆராய்ச்சி நாளில் மாண்பமை வேந்தர் ஐயா கைகளால் தங்கப் பதக்கம் பெற்றார்.




## சிறப்பு வல்லுநர்களாக…

**தமிழ்த்துறையின் பேராசிரியர்கள் கடந்த ஆண்டு வெவ்வேறு கல்வி நிறுவனங்களில் சிறப்பு வல்லுநர்களாகப் பங்கேற்று ஆய்வுரை வழங்கியுள்ளனர்.**

| வ.எ. | வல்லுநர் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | முனைவர் பா. ஜெய்கணேஷ் | 10 |
| 02 | முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி | 01 |
| 03 | முனைவர் சு. சரஸ்வதி | 02 |
| 04 | முனைவர் தா. ஜெயந்தி | 02 |
| 05 | முனைவர் ந. இரஞ்சன் | 02 |












தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் கடந்த ஆண்டு தமிழகத்தின் பல்வேறு இன்றியமையாத செம்மொழி நிறுவனம், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், வானொலி ஆகியவற்றில் பல்வேறு உரைகளை வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.



# விருதுகள்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் தங்களின் செயல்பாட்டிற்காகப் பல்வேறு விருதுகளை வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து பெற்றுள்ளனர்.

| வ.எ. | விருதாளர் | விருது | நிறுவனம் |
|---|---|---|---|
| 01 | முனைவர் பா. ஜெய்கணேஷ் | தொண்டன்பர் விருது | AMAV & WTC நிறுவனம், ஆஸ்திரேலியா. |
| 02 | முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி | சிறந்த பேராசிரியர் விருது | சுற்றுச்சூழல் கல்வி வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான இந்திய அகாடமி, நீலகிரி. |
| | | பெண் பேராசிரியர் விருது | புதுச்சேரி ஆராய்ச்சி மேலாண்மைக் கல்வி நிறுவனம். |
| | | ஆய்வுச்சுடர் விருது | அகத்திய மாமுனிவர் கலை இலக்கியப் பண்பாட்டு ஆய்வு மையம், அகத்தீஸ்வரம். |

★ **குடியரசுத் தலைவர் விருது**

முனைவர் பா.ஜெய்கணேஷ் அவர்கள் 2015 ஆம் ஆண்டு தம் ஆய்வுப் பணிக்காகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வழிக் குடியரசுத் தலைவர் கையால் இளம் ஆய்வறிஞர் விருது பெற்றார்.

| | | | |
|---|---|---|---|
| 03 | முனைவர் சு. சரஸ்வதி | சிறந்த பெண் ஆசிரியர் விருது | புதுச்சேரி மேலாண்மைக் கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம், லண்டன் ஸ்கில் டெவலப்மெண்ட் லிமிடெட் UK உடன் இணைந்து வழங்கப்பட்டது. |
| 04 | முனைவர் ந. இரஞ்சன் | நிவேதிதா பாலபாரதி விருது | தெய்வீகத் தமிழ்ச் சங்கம், ஆத்தூர் |











# உறுப்பினர்கள்

| வ.எ. | பேராசிரியர் | நிறுவனம் |
| --- | --- | --- |
| 01 | முனைவர் பா. ஜெய்கணேஷ் | 1.. இந்திய மொழியியல் சங்கம், பூனே.<br>(Linguistic Society of India)<br>2. தமிழ் வளர்ச்சி மன்றம், ஆஸ்திரேலியா.<br>3. திராவிட மொழியியல் கழகம், கேரளா<br>(Dravidian Linguistics Association of India) |
| 02 | முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி | 1. திராவிட மொழியியல் கழகம், கேரளா<br>(Dravidian Linguistics Association of India) |
| 03 | முனைவர் சு. சரஸ்வதி | 1. திராவிட மொழியியல் கழகம், கேரளா.<br>(Dravidian Linguistics Association of India)<br>2. இந்திய மொழியியல் சங்கம், பூனே.<br>(Linguistic Society of India) |
| 04 | முனைவர் தா. ஜெயந்தி | 1. இந்திய மொழியியல் சங்கம், பூனே.<br>(Linguistic Society of India)<br>2. திராவிட மொழியியல் கழகம், கேரளா.<br>(Dravidian Linguistics Association of India) |
| 05 | முனைவர் ந. இரஞ்சன் | 1. திராவிட மொழியியல் கழகம், கேரளா.<br>(Dravidian Linguistics Association of India)<br>2. இந்திய மொழியியல் சங்கம், பூனே.<br>(Linguistic Society of India) |

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் (குறள் - 394)

# ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

ஆசிரியர்களுக்கான திறன்களை வளர்த்துக் கொள்ளும் விதமாகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் பல்வேறு ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் கலந்து கொண்டுள்ளனர்.

| வ.எ | வல்லுநர் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | முனைவர் பா. ஜெய்கணேஷ் | 05 |
| 02 | முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி | 02 |
| 03 | முனைவர் சு. சரஸ்வதி | 04 |
| 04 | முனைவர் தா. ஜெயந்தி | 05 |
| 05 | முனைவர் ந. இரஞ்சன் | 03 |

# இதழ்களில் ஆசிரியர் குழுவினராக...

## முனைவர் பா. ஜெய்கணேஷ்

- வல்லமை மின்னிதழ் ISSN – 2348 - 5531
- சான்லாக்ஸ் பன்னாட்டு ஆய்விதழ் (ISSN Number - 2582 – 2810)
- தமிழ்ப் பண்பாட்டு இலக்கிய இதழ் (E - ISSN Number - 2583 – 0325)
- தமிழ்த் தடம், பரிசல் புத்தக நிலையம், சென்னை.

முதலான இதழ்களில் ஆசிரியர் குழு உறுப்பினராகப் பங்காற்றி வருகிறார்.

# முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

தமிழ்த்துறையில் கடந்த கல்வியாண்டு முதல் 4 முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்கள் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக நிதியுதவியுடன் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். ஒருவர் யூ.ஜி.சி. ஆய்வு உதவித்தொகை பெற்று ஆய்வு நிகழ்த்தி வருகிறார். மொத்தம் 5 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் முழு நேரமாகவும் 10 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பகுதி நேரமாகவும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். தேசியத் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்குப் பல்கலைக்கழகம் மாதந் தோறும் ரூ. 31,000 - ஐ சிறப்பு உதவித் தொகையாக வழங்கி வருகிறது.

## ஆய்வு நெறியாளர்கள்

முனைவர் பா. ஜெய்கணேஷ்

முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி

முனைவர் சு. சரஸ்வதி

முனைவர் தா. ஜெயந்தி

முனைவர் ந. இரஞ்சன்

## முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

திரு. ர. சதீஷ் குமார்

செல்வி த. மகேஸ்வரி

செல்வி ப. மரிய தேவ நேசம்

திரு. க. விஜயன்

திரு. மு. ராமர் மாசானம்

எஸ்.ஆர்.எம். தமிழ்த்துறை முனைவர் பட்ட ஆய்வாளர் திரு. ர. சதீஷ் குமார் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (CICT) ஜூன் 2023 இல் ஒருங்கிணைத்த "தமிழ்ச் செவ்விலக்கிய ஆய்வு அணுகுமுறைகள்" என்னும் பத்துநாள் பயிலரங்கில் பங்கேற்றுச் சான்றிதழ் பெற்றார்.

# முனைவர் பட்டம்

80 வயதில் தமிழ்த்துறையின் வழியாக "நால்வர் பாடல்களில் ஊழ்" என்னும் தலைப்பில், நெறியாளர் முனைவர் வ. தனலட்சுமி அவர்களின் மேற்பார்வையில் முனைவர் பட்ட ஆய்வை நிறைவு செய்து 10.11.2022 அன்று எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் முனைவர் பட்டம் பெற்றார் பழ. முருகேசன் அவர்கள். இவர் ஏற்கனவே பொறியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். இவர் பட்டம் பெற்ற செய்தி பல்வேறு தொலைக்காட்சிகளிலும் செய்தித் தாள்களிலும் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.






BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 | VOL. 15 NO. 266 CHENNAI | FRIDAY, NOVEMBER 11, 2022 | 26 PAGES | METRO | PRICE ₹4.00

## Lok Sabha Speaker exhorts youth to actively participate in democratic process

TIMES NEWS NETWORK

Chennai: Calling upon the youth to participate in the democratic process, Lok Sabha speaker Om Birla on Thursday said people should ensure that the elected representatives work to the best of their abilities in formulating future policies and programmes for the country.

Participating in the convocation of SRM Institute of Science and Technology (SRMIST) in Chennai, he asked students to give suggestions and feedback to the Prime Minister.

Lok Sabha speaker Om Birla and SRMIST founder chancellor T R Paarivendhar hand degree certificates to a student on Thursday

"In the 75 years of our democratic journey, we have made laws to give more power to people. Because of that, we have been able to have a transparent and accountable government. We have abolished colonial-era laws," he said.

There is a need to bring out more changes in the administrative processes, there is a need for laws whose objective is the welfare of the public. "It is here where the larger scope for participation of youth exists," he added.

He further said India is emerging as a global hub for technology and innovation and the world is looking towards our nation which has garnered the ability to churn out solutions to challenges that are not only bothering the country but also the world.

Founder chancellor of SRMIST T R Paarivendhar said 12,000 students were placed from the institution.

As many as 7,125 students from science and humanities, management, law, agriculture, medicine and health sciences received degrees at the convocation, while 208 students received medals.

SRMIST vice-chancellor C Muthamizhchelvan presented the annual report of the institute. Pro-chancellor (academics) P Sathyanarayanan, pro-vice-chancellor (MHS) Lt Col A Ravi Kumar and others attended the event.

## At 80, retired engineer bags PhD in Tamil

Ragu.Raman@timesgroup.com

Chennai: For most retired people, the 70s and 80s are time for relaxation and reflection. Many add meaning to their lives by turning to spiritual ways or add colour in their mature years by being caring grandparents. But Pazha Murugesan went beyond the prosaic.

At 80, he has bagged a PhD degree after a six-year course duration. On Thursday, Murugesan was among 7000-odd students who received their degrees at SRM Institute of Science and Technology.

The packed auditorium at SRMIST accorded a thunderous applause to this 80-year-old scholar when he came on stage to receive his degree.

BASH ON: Pazha Murugesan

After retiring as a superintending engineer from TNEB in 2000, Murugesan worked as a professor of electrical engineering in a few colleges of the city for more than a decade.

His research topic was "Samayakuravar Nalvar Padalgalil Uzh" (Karma in the Hymns of Four Saints of Shaivism).

He said his inspiration to study Tamil literature was his teacher Chellandi Pandaram.

Later, he developed interest in Panniru Thirumurai, a twelve-volume compendium of songs or hymns in praise of Shiva.

"It is my long-time wish to study Thirumurai. But I didn't get enough time to pursue my interest in Tamil while working in the electricity board.

I enrolled for a PhD when I had time for myself," the retired engineer told TOI.

He received his PhD degree from Lok Sabha speaker Om Birla.

"When I wanted to choose this topic for research, my guide Dhanalakhsmi V encouraged me. She also motivated me. My friends and family members were always supportive of this attempt," he said.

Murugesan plans to do his post-doctoral research on the same topic.

# மதிப்புக்கூட்டுப் பாடம் (Value Added Course)

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் கலையியல் புலத்தின் பல்வேறு துறை சார்ந்த மாணவர்களுக்குத் தமிழ்க் கவிதைக் கலை, நாடகத் தமிழ் என்னும் இரு மதிப்புக் கூட்டுப் பாடங்கள் நடத்தப்பெற்றன.







மாணவர்கள் கவிதைத் திறனையும் நாடகத் திறனையும் அறியும் பொருட்டுப் பாடநேரம் இல்லாத பிற நேரங்களில் அவர்களுக்கு இப்பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டன.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு (குறள் : 396)

## முனைவர் பட்ட ஆய்வாளர்களின் செயல்பாடுகள்

தமிழ்த்துறையின் முனைவர் பட்ட ஆய்வாளர்களான கா.விஜயன், ப.மரிய தேவ நேசம் ஆகியோர் மைசூரில் இயங்கி வரும் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் (CIIL) நடத்திய ஐந்து நாள் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றனர்.






எஸ்.ஆர்.எம். பாரிவேந்தர் ஆராய்ச்சிக் கூட்டமைப்புத் தொடர்பாக Poster Presentation நிகழ்வில் தமிழ்த்துறை முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரை வழங்கினர். இதில் தமிழ்த்துறை முனைவர் பட்ட ஆய்வாளர் க. விஜயனின் விளக்கப்படம் தெரிவு செய்யப்பட்டது.

### சேவை நலத்திட்டச் செயல்பாடு

பொத்தேரி அரசுப் பள்ளி மாணவர்களுக்குச் சேவை நலத்திட்டத்தை முன்னிட்டு 17.04.2023 அன்று **விளையாட்டு தினம்** எஸ்.ஆர்.எம். தமிழ்ப் பேராயம் பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் ஆகியவற்றோடு இணைந்து நடத்தப்பட்டது. பல்வேறு போட்டிகள் நடத்தி மாணவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.










**செய்தி மடல் உருவாக்கம் : தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்.**

**வடிவமைப்பு – முனைவர் பா. ஜெய்கணேஷ் & முனைவர் ம. லோகேஸ்வரன்**